# இயல் - I

# முன்னுரை

ஊராட்சிகளுக்கு, அவற்றின் பல்வேறு நிலைகளில் ஒப்படைக்கப்பட வேண்டிய பொறுப்புகள் குறித்தும் அவற்றால் நிறைவேற்றப்பட வேண்டிய பங்குகள், கடமைகள், செயல்பாடுகள் குறித்தும், கருதுவதற்கும் பரிந்துரைகளைச் செய்வதற்குமாக, மாநில திட்டக் குழு உறுப்பினர்களைக் கொண்ட சிறு பணிக்குழுவை அமைக்குமாறு மாநிலத் திட்டக் குழுவிடம், தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சித் துறை வேண்டுகோள் விடுத்தது. 20.9.96 ஆம் நாளும் 20099 / இ1 / 96 –டி எண்ணுமிட்ட ஊரக வ்ளர்ச்சித்துறையின் கடிதத்தின் படியொன்று இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு – 1). 27–9–96 அன்று நடைபெற்ற மாநிலத் திட்டக்குழு உறுப்பினர்களின் முதற்கூட்டத்தில் இவ்வேண்டுகோள் குறித்துக் பரிசீலிக்கப்பட்டது. இப்பணியை மேற்கொள்வதற்கு குழுவொன்றை அமைக்க முடிவெடுக்கப்பட்டது.

## குழுவின் அமைப்பு

1.2. இம் முடிவின் தொடர்ச்சியாக, குழுவின் அமைப்பு ஒன்று அமைக்கப்பட்டது. 27.10.96 ஆம் நாளும் 4781/மா.தி.கு/டிபி/96 எண்ணுமிட்ட செயல்முறை ஆணையின் படியொன்று இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு – 2)

| | | |
|---|---|---|
| 1. | திரு. எல்.சி. ஜெயின்<br>உறுப்பினர்<br>மாநிலத் திட்டக் குழு | தலைவர் |
| 2. | திரு. டி.வி. அந்தோணி இ.ஆ.ப. (ஓய்வு)<br>உறுப்பினர்<br>மாநிலத் திட்டக் குழு | இணைத் தலைவர் |
| 3. | திரு. கே.வி. பழனிதுரை<br>முழு நேர உறுப்பினர்<br>மாநிலத் திட்ட குழு | உறுப்பினர் |
| 4. | டாக்டர். இ. ரமேஷ் சந்திரபண்டா இ.ஆ.ப.<br>உறுப்பினர் – செயலர்<br>மாநிலத் திட்டக் குழு | அமைப்பாளர் |
| 5. | அரசு செயலாளர்<br>ஊரக வளர்ச்சித் துறை | சிறப்பு அழைப்பாளர் |

## ஆய்வுக்குரிய பொருள் வரையறை

1.3. பணிக்குழு எடுத்துக் கொண்டுள்ள ஆய்வுக்குரிய பொருள் வரையறை மற்றும் அதன் நோக்கங்கள் வருமாறு :–

(i) ஊராட்சிகளிடம் பல்வேறு நிலைகளில் ஒப்படைக்கப்பட வேண்டிய பொறுப்புகள் மற்றும்

(ii) அவற்றிற்கு அளிக்கப்படவுள்ள இப்பொறுப்புகள் தொடர்பில் ஊராட்சிகளின் பங்குகள், கடமைகள், செயல்பாடுகள் ஆகியன.

**கூட்டங்கள்**

1.4. மாநிலத் திட்டக் குழு பிரிவு பல்வேறு நிறுவனங்களுடனும் வல்லுநர்களுடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டது. இக்குழுவின் பரிந்துரை **27.9.96** அன்று நடைபெற்ற மாநில திட்டக் குழு உறுப்பினர்களின் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டது. **10.2.97** அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாநிலத் திட்டக் குழு கூட்டத்தில் இக்குழுவின் முதல் அறிக்கை அளிக்கப்பட்டது. இம் முதல் அறிக்கை அரசுக்கு **6.1.97** அன்று அனுப்பப் பெற்றது. குழுவின் இரண்டாவது அறிக்கை **17.3.97** அன்று அரசிடம் வழங்கப்பட்டது. **4.4.97** அன்று இறுதி அறிக்கை மாநிலத் திட்டக்குழு உறுப்பினர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

| நாள் | கூட்டத்தின் தன்மை |
|---|---|
| 27.9.96 | மாநிலத் திட்ட குழு உறுப்பினர்களின் கூட்டம் |
| 22.10.96<br>23.10.96<br>16.11.96<br>18.11.96<br>19.11.96 | குழுக் கூட்டம் |
| 20.11.96 | மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுடன் கலந்துரையாடல் |
| 20.11.96 | மா.தி. கு. உறுப்பினர்களின் கூட்டம் |
| 25.11.96 | குழுக் கூட்டம் |
| 26.11.96 | குழுக் கூட்டம் |
| 30.11.96 | மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்ற உள்ளாட்சி மன்றங்களின் தலைவர்களின் கருத்தரங்கில் கலந்து கொள்ளுதல் |
| 16.12.96<br>17.12.96 | குழுக் கூட்டம் |
| 18.12.96<br>19.12.96 | மா. தி. கு. உறுப்பினர்களின் கூட்டம் |
| 03.01.97<br>04.01.97 | குழுக் குழுக்கூட்டம் |
| 06.01.97 | மா. தி. குழுவின் முதல் அறிக்கை தலைமைச் செயலாளர் அவர்களிடம் அளிக்கப்பெற்றது. |
| 08.01.97<br>10.02.97 | குழுக்கூட்டம் |
| 10.02.97 | மா.தி.கு. 2 வது கூட்டத்தில் குழுவின் முதல் அறிக்கை கருத்தளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 11.02.97 | குழுக் கூட்டம் |
| 26.02.97 | மா.தி.கு. உறுப்பினர்களின் கூட்டம் |
| 11.03.97 | குழுக் கூட்டம் |
| 12.03.97 | மா.தி.கு. உறுப்பினர்களின் சாரா கூட்டம் |

## அறிக்கையின் அமைப்பு

1.5. கீழே குறிப்பிட்டுள்ளவாறு முதல் அறிக்கை 7 இயல்களைக் கொண்டதாகத் தயாரிக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| இயல் – I | அறிமுகம் | இவ்வியலில் குழுவின் கூட்டமைப்பு ஆய்வுக்குரிய பொருள் வரையறை மற்றும் நடைபெற்ற விவாதக் குறிப்புகளை உள்ளடக்கியது. |
| இயல் – II | வரலாற்றுப் பின்னணி | இவ்வியலில் ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக மாநிலத்தில் பஞ்சாயத்து ஆட்சி முறையின் வரிசைப்படியான வளர்ச்சியையும் முக்கியக் கூறுகளை மட்டும் விவரித்துக் கூறுவதும் உள்ளது. |
| இயல் – III | அணுகுமுறை | இவ்வியல் குழுவின் பரிந்துரைகளை இறுதியாக்கம் செய்வது தொடர்பில் அனுசரிக்கப் பெற்ற அணுகுமுறை பற்றியதாகும். குழுவில் நிகழ்த்தப் பெற்ற கலந்துரையாடல்களின் அடிப்படையில் தேசிய 'அரசு மற்றும் வட்டாரப் பின்னணிகளின் தொடர்பிலான அணுகுமுறைக் காரணிகள் குறித்து பரிசீலிக்கின்றது. |
| இயல் – IV | அதிகார ஒப்படைப்புக்கான பரிந்துரைகள் | 29 இனங்களின் நிலை குறித்து இவ்வியலில் பரிந்துரைகள் பகுப்பாய்வு செய்யப்பெறுவதுடன் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு, நிருவாகம் நிதி மற்றும் சட்டச்சிக்கல்கள் உட்பட ஒப்படைக்கப்பட வேண்டிய அதிகாரங்கள் மீதான பரிந்துரைகள் குறித்தும் ஆராயப் பட்டுள்ளது. |
| இயல் V | திட்டங்கள் மற்றும் நிறுவனங் களுக்கான பரிந்துரைகளின் வழிகாட்டும் குறிப்பு | இவ்வியல் மாநிலத்தில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளால் செயற்படுத்தப்பட வேண்டிய, மேற்பார்வையிடப்பட வேண்டிய மற்றும் கண்காணிக்கப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பிலானது. மேலும் இவ்வியல் இவ்வூராட்சி அமைப்புகளால் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய/மேற்பார்வையிடப்பட வேண்டிய/நிருவகிக்க வேண்டிய நிறுவனங்கள் தொடர்பில் ஆனதும் ஆகும். |
| இயல் – VI | பரிந்துரைகளின் செயலாக்கம் | இவ்வியல் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்குத் தொடர் நடவடிக்கைகளின் வகைகள் குறித்தும், ஊரக உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்க வேண்டிய கூடுதல் அதிகாரங்கள், பொறுப்புகள் குறித்தும் எடுத்துரைக்கிறது. |
| இயல் – VII | முடிவுரை | |